கோளாறு காரணமாக திறக்க
), ஏராளமான வாகன ஓட்டிகள்

புதுச்சரி – விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலையில் சென்ற வாகன ஓட்டிகள் மிகுந்த அவதிக்குள்ளாயினர்.

பெரியசெவலை, செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை பகுதி, வேலூர், பெரும்பாக்கம், பரிக்கல், கூவாகம், ஆமூர், பாவந்துார், கொளத்துார், பெண்ணைவலம், டி.எடையார், அம்மா வாசைப்பாளையம், மேலமங்கலம், கிராமம், திருவெண்ணைநல்லுார், சிறுமதுரை, பையூர், ஏனாதிமங்கலம், ஏமப்பூர், சிறுவானுார், எரஞூர் ஆகிய பகுதிகளில் மின் நிறுத்தம் செய்யப்படுகிறது.

## மயங்கி விழுந்த மீன் வியாபாரி பலி

**திருக்கோவிலுார், மே15–**

திருக்கோவிலுார் அருகே மீன் வியாபாரி மயங்கி விழுந்து பரிதாபமாக இறந்தார்.

திருக்கோவிலுார் அடுத்த வடமாம்பாக்கம் கிராமத்தை சேர்ந்த முனியன் மகன் கோவிந்தன், 35; மீன் வியாபாரி. கடந்த 12ம் தேதி காலை 9:00 மணிக்குசெட்டிதாங்கல் பஸ் நிறுத்தம் அருகே தனது மொபட்டில் மீன் வைத்து விற்றுக் கொண்டிருந்தார்.

அப்பொழுது திடீரென மயங்கி விழுந்தார். உடன் மீன் வியாபாரம் செய்த காமராஜ் என்பவர் அவரை மீட்டு, 108 ஆம்புலன்ஸ் மூலம் திருக்கோவிலுார் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு, அவரை பரிசோதித்த டாக்டர்கள் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இது குறித்த புகாரின்பேரில் திருக்கோவிலுார் போலீசார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

## வடதொரசலுார் டி.எல்.எம்., மருத்துவமனை உட்கட்டமைப்பை மேம்படுத்த நிதிஉதவி

**தியாகதுருகம், மே 15–**

வடதொரசலுார் உட்பட 3 டி.எல்.எம்., மருத்துவமனையில் சிகிச்சை தரத்தை மேம்படுத்த மத்திய அரசின் நவரத்தினா நிறுவனம் 4.99 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கியுள்ளதாக டாக்டர் ஐரா பாக்கியநாதன் தெரிவித்தார்.

தியாகதுருகம் அடுத்த வடதொரசலுார் டி.எல்.எம்., மருத்துவமனையின் தலைமை டாக்டர் ஐரா பாக்கியநாதன் கூறியுள்ளதாவது:

டில்லியை தலைமை இடமாக கொண்டு, டி.எல்.எம்., தொழுநோய் மருத்துவ சேவை மையம், 14 இடங்களில் மருத்துவமனைகளை நிறுவி, கடந்த 144 ஆண்டுகளாக மக்களுக்கு சேவை செய்து வருகிறது.

கடந்த நிதியாண்டின் திட்ட வரைவுபடி சாம்பா, பைசாபாத், வடதொரசலுார் ஆகிய 3 மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த ஆர்.இ.சி., மற்றும் மத்திய அரசின் நவரத்தினா நிறுவனம், தனது கூட்டாண்மை சமூக பொறுப்பின் அடிப்படையில் 4.99 கோடி ரூபாய் நிதிஉதவியை அளித்துள்ளது.

இதற்கான ஒப்பந்தம் கடந்த மாதம் 23 ம் தேதி பொருளாளர் அஜித்அகர்வால், முதன்மை செயல் அலுவலர் சஞ்சீவ் கார்க், உதவி பொதுமேலாளர் ராஜ்பால்சிங், செயல்இயக்குனர் மேரி வர்கீஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிதியை கொண்டு மருத்துவமனையில் உயர்தர உபகரணங்களுடன் கூடிய அறுவை சிகிச்சை அரங்கம், தாய், சேய் நல மையம், மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு உள்ளிட்ட உடகட்டமைப்பு வசதி மேம்படுத்தப்பட்டு ஏழை, எளிய மக்களுக்கு தரமான மருத்துவ சேவை அளிக்க முடியும்.

இதன் மூலம் தொழுநோயாளிகள் மட்டுமின்றி அனைத்து நோய்களுக்கும் இங்கு சிறப்பு சிகிச்சை அளிக்க முடியும், என்று, டாக்டர் ஐரா பாக்கியநாதன் கூறினார். மருத்துவமனை கண்காணிப்பாளர் மார்த்தம்மாள் உடனிருந்தார்.




மத்திய அரசின் சேவாரத்தினம் நிறுவனம் மூலம், டி.எல்.எம்., மருத்துவமனை மேம்பாட்டிற்காக வழங்கப்பட்ட 4.99 கோடி ரூபாய் நிதிஉதவி ஒப்பந்தத்தை, டில்லியில் நடந்த நிழ்ச்சியில் உதவிபொதுமேலாளர் ராஜ்பால்சிங்கிடமிருந்து செயல் இயக்குனர் மேரி வர்க்கீஸ் பெற்றுக்கொண்டார்.